
# DIOCESAN NEWS LETTER
## VELLORE

Vol. 19 DECEMBER - 2023 No. 12

இறையரசு மலர

“அவர் உங்களுக்குச்
சொல்வதெல்லாம் செய்யுங்கள் யோவான்” 2:5

# DIOCESAN NEWS LETTER VELLORE

(FOR PRIVATE CIRCULATION ONLY)

**Vol. 19 DECEMBER - 2023 No. 12**

**Dear Fathers, Brothers and Sisters**

We are in the festive mood of Christmas. Every year we celebrate Christmas but what it means Christmas for me this year? Christmas means **C**hild of **H**oly **R**edeeming **I**ncarnated **S**on **T**o **M**anifest **A**s **S**avior to all = **JESUS**

**Child**: every child is a gift of God and they are indeed created in the image and likeness of God (Gen 1:26) This image and likeness of God was disfigured by the Sin of the First parents. To restore this image God has taken the form of a child. And this Child was born in a Manger. All these symbolize that children are most vulnerable beings. So it is our (individual and society) duty to ensure the safety and security of every child in this world. But what we see the evils against the children are: child labour, child abuse, child killing. These are the current issues against children. What happens in Gaza (Palestine) According to UNO report the most insecure region in the world for child protection is Gaza. So also child labour and child abuse prevail all over the world. In this situation what is my Christmas?

**Holy**: the Child was born in Bethlehem is all **Holy.** It was the fact that the Child born to Mary was by the power of the Holy Spirit. The third Person of God is Holy Spirit. If so the second Person of God, Jesus is also Holy since his conception took place by the power of the Holy Spirit. So it is beyond our human perception that the Child was born in Bethlehem is all **Holy.** If this holy child was born in a Manger, the ugliest place means it is a pure gift of God to mankind that this holy child is born again and again in this unworthy society every year. The Christmas tells us that not to blame our birth where it was but to strive to become holy all through our life. Let us not be hindrance to the innocent people (Mk 9:42)

**Redeeming**: when the people of Israel was in Egyptian bondage God Yawah redeemed them from the slavery and promised them a land of honey and milk, "I have observed the misery of my people who are in Egypt; I have heard their cry on account of their taskmasters. Indeed, I know their sufferings, and **I have come down to deliver** them from the Egyptians, and to bring them up out of that land to a good and broad land, a land flowing with milk and honey" (Ex 3:7-8) so, whenever there is cry of slavery and bondage God comes down to redeem. Jesus is our **Redeemer** and he had come down from the Father to redeem us from all sorts of bondages: selfishness, untruthfulness, injustice, hatred, revengeful, caste, creed and color. To redeem someone one has to pay huge money. Jesus in order to redeem us from the bondage of sin he gave his life as ransom, "…the Son of Man came not to be served but to serve and to give his life a ransom for many'' (Mt 20:28). Christmas for us is to redeem all those prisoners, child labors, children abused, and all the vulnerable persons.

**Incarnated:** incarnation means to take a form of someone or something for a particular cause. Jesus is the incarnation of God the Father in the form of a man. What is the reason for this incarnation? This is very vivid from the letter of St. Paul to the Philippians where he says, “ though he was in the form of God, did not regard equality with God as something to be exploited, but emptied himself, taking the form of a slave, being born in human likeness. And being found in human form, he humbled himself and became obedient to the point of death- even death on a cross” (Phi 2:6-8). Another name for Jesus’ incarnation is ‘Emmanuel’ means “God is with us”(Mt 1:23) Christmas for us is to be humble, to be emptied, to be a slave and to be obedient by casting out all our pride, prestige, and self glory. And to realize that he is with us, he is with everyone without any barrier.

**Son**: the status of being a son is the heir of his father’s possessions and properties. Jesus is the Son of God who has all the right of his Father’s power and possessions. Jesus the Son of God became Son of Man in order to make us all the sons and daughters of his Father. That’s why in the Gospel of John we see in many occasions where Jesus says ‘I and the Father are one’. “Very truly, I tell you, the Son can do nothing on his own, but only what he sees the Father doing; for whatever the Father does, the Son does likewise. The Father loves the Son and shown him all that he himself is doing; and he will show him greater works than these, so that you will be astonished”. Indeed, just as the Father raises the dead and gives them life, so also the Son gives life to whomever he wishes…. Anyone who does not honor the Son does not honor the Father who sent

him" (Jn 5:19-23) Christmas reminds us that Jesus the Son of God became Son of Man in order to make us all the sons and daughters of his Father. So we should be proud of being sons and daughters of God the Father through His Son Jesus. God himself witnessed the son at his baptism, "This is my Son, the Beloved, with whom I am well pleased" (Mt 3:17)

**To Manifest**: manifest means to exhibit someone's quality, degree, status and position. Jesus is the manifestation of God's love to mankind. "For God so loved the world that he gave his only son, so that everyone who believes in him may not perish but may have eternal life"(Jn 3:16) Secondly Jesus manifest God's mercy and forgiveness. To show God's mercy and forgiveness he identified himself with the sinners. He stood amidst the sinners during his baptism at the river Jordan. Thirdly he himself said that "For I have come to call not the righteous but sinners." (Mt 9:13) in another place he showed mercy and forgave the sinful woman, "I tell you, her sins are forgiven; hence she has shown great love….then he said to her, "Your sins are forgiven."(Lk 7:47-48) Christmas is the time that the Son of God is in search of us the sinners not only to manifest but also to reassure the unconditional love of God and boundless mercy and forgiveness of our sins.

**As Savior to all**: yes, Jesus' manifestation is to save us from our iniquities. He is a Savior sent by God for Salvation to all mankind. This is the Good News and joyous news as well by God to humanity. That's what the Angels told the shepherds when he was born, "I am bringing you good news of great joy for all the people: to you is born this day in the city of David a Savior, who is the Messiah, the Lord."

(Lk 2:10-11) Savior is the one who saves life others by giving his own life. The Savior is our Good Shepherd where he says, “I am the good shepherd. The good shepherd lays down his life for the sheep.”(Jn 10:10,11,15,17)

Now this Savior is going to be born this year. The historical Jesus was born in Bethlehem two thousands year ago. But if Jesus the Savior is to be born today let us follow the aforesaid meaning of **CHRISTMAS** and try to put them in practice.

I take this opportunity to wish you all a very

**MERRY CHRISTMAS AND PROSPEROUS NEW YEAR 2024**

God bless,
Yours in Christ Jesus,



**Very Rev. Msgr. I. John Robert,**
Diocesan Administrator

## ADMINISTRATOR’S PROGRAM

02 M — Foundation Stone Blessing, Pulavanbadi
E — Community Day Celebration, Snegadeepam
03 — Feast Mass, Zamin Guddalore
05 — Blessing of St. Antony’s Statue, Kaniyambadi
08 — Blessing of the Monestry, Thaneerpanthal
09 — CRI Christmas Celebration, Sangamam Hall, Vellore
10 M — Wedding at Cathedral, Vellore
E — Youth Meeting, Vellore

| | | |
|---|---|---|
| 15 | | Council Fathers' Christmas Gathering |
| 16 | E | Christmas Celebration, Chetpet |
| 17 | M | Mass at Vaniyambadi |
| | E | Christmas Carols Program, Gandhinagar |
| 18 | M | Catechists' Christmas Celebration |
| | E | Blessig of the S.S.C. Building, S.H.S., Athipet |
| 19 | | Christmas Celebration, R.C.M. School |
| 20 | | Clergy Recollection & Christmas Celebration, Bishop's House |
| 22 | | VSSS & TVMSSS Christmas Celebration |
| 24 | | Christmas Vigil Mass at Cathedral, Vellore |
| 27 | | Youth Fest, Sangamam Hall, Vellore |
| 28 | | Minor Basilica Erection, Palayamkottai |
| 31 | | New Year Vigil Mass at Cathedral, Vellore |

**MONTHLY RECOLLECTION AND CHRISTMAS CELEBRATION**

As usual the December monthly recollection and Christmas celebration for all the clergy will take place on Wednesday, 20 December 2023.

Program :
09:30 am - Arrival and Coffee
10:00 am - Talk
11:15 am - Adoration and Confession
12:15 am - Christmas Program followed by Fellowship Meal



**Very Rev. Msgr. I. John Robert,**
Diocesan Administrator

## யூபிலி 2025 இறைவேண்டல்

விண்ணகத் தந்தையே,

உம் திருமகனும் எம் சகோதரருமான இயேசு கிறிஸ்துவில் நீர் எங்களுக்கு வழங்கிய நம்பிக்கையும் தூய ஆவியார் வழியாக எங்கள் இதயங்களில் நீர் பற்றியெரியச் செய்த பிறரன்புச் சுடரும் உமது அரசின் வருகைக்கான எதிர்நோக்கை எங்களில் தட்டி எழுப்புவனவாக! நற்செய்தியின் விதைகளை நாளும் வளர்த்தெடுக்கும் நல்லோராய் உம் அருள் எம்மை மாற்றுவதாக! தீமையின் ஆற்றல்கள் மறைந்து உம் மாட்சி நீடித்து ஒளிரும் பொருட்டு மானிட உள்ளங்களும் முழு அண்டவெளியும் புதிய விண்ணகம் புதிய மண்ணகம் நோக்கிய காத்திருத்தல் மாற்றம் பெறுவனவாக!

யூபிலிக் கொண்டாட்டத்தின் அருள் விண்ணகச் செல்வங்களுக்கான ஆர்வத்தை எதிர்நோக்கின் திருப்பயணிகளாகிய எம்மில் தூண்டி எழுப்புவதாக! அதே அருள் எம் மீட்பரின் மகிழ்ச்சியையும் அமைதியையும் அகிலமெங்கும் அளிப்பதாக!

என்றென்றும் போற்றுதற்குரிய எம் கடவுளாகிய உமக்கே மாட்சியும் புகழும் இன்றும் என்றும் உரித்தாகுக! ஆமென்.

திருத்தந்தை பிரான்சிஸ்

## இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை

யூபிலி 2025 : எதிர்நோக்கின் திருப்பயணிகள் 2025ம் ஆண்டு பொது யூபிலி தயாரிப்பின் தொடக்க விழா

நவம்பர் 26, 2023 ஞாயிற்றுக்கிழமை, கிறிஸ்து அரசர் பெருவிழா. திருவழிபாட்டு வழிகாட்டி 2025ம் ஆண்டு பொது யூபிலி தயாரிப்பினை நவம்பர் 26, 2023 அன்று கிறிஸ்து அரசர் பெருவிழாவின் போது தொடங்க அனைத்து தலத் திருஅவைகளுக்கும் முன்மொழியப்பட்டுள்ளது. ஆயினும் தலத் திருஅவை ஆயர் தகுந்த நாள் மற்றும் நேரத்தை தேர்ந்துகொள்ளலாம். நாம் யூபிலி 2025ன் தயாரிப்புகளைத் தொடங்குகிறோம், கொண்டாட்டங்களை அல்ல

என்பதை குறிப்பில் கொள்ளவும். கொண்டாட்டங்கள் நவம்பர் 24, 2024 அன்று திருத்தந்தையால் தொடங்கி வைக்கப்படும்.

தயாரிப்பின் தொடக்கம் மூன்று அம்சங்களை கொண்டது :

யூபிலி 2025-ன் முத்திரைச் சின்னம் திறக்கப்படல். இச்சின்னம் இயற்கைக்கு இணைந்த அட்டையிலோ அல்லது கொடிமரத்தில் ஏற்றத்தகுந்த துணியிலோ வெள்ளை பின்னணி நிறத்தில் ஆச்சிடப்பட்டு திறக்கப்படவோ அல்லது ஏற்றப்படவோ வேண்டும். அனைத்து பங்குகள் மற்றும் சமய நிறுவனங்களில் இச்சின்னத்தை பொது பார்வையில் வைக்க அழைக்கப்படுகிறார்கள்.

பலர் பங்குகொள்ளும் அளவில் குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு சிறப்பு திருப்பலி நிறைவேற்றி, 2025ம் ஆண்டு பொது யூபிலியின் தயாரிப்பு பற்றிய விளக்கங்கள் அளிக்கப்படலாம்.

யூபிலி 2025யின் மன்றாட்டு நவம்பர் 26, 2023 அன்று தொடங்கி யூபிலி ஆண்டு 2025-ன் இறுதிவரை சொல்லப்படும். திருப்பலி முன்னுரை மற்றும் முத்திரைச் சின்னம் வெளியிடல் இயேசு கிறிஸ்துவில் அன்பு நிறை சகோதர சகோதரிகளே, நமது தாய் திருஅவை, 'ஒருங்கிணைப்பு, பங்கேற்பு, மறைப்பணி' ஆகியவற்றை கருத்தாய்வு செய்து, கூட்டொருங்கியக்கம் சார்ந்த மாமன்றத்தின் 16ம் பொது அமர்வின் முதல் அமர்வை நிறைவு செய்துள்ளது. இப்பயணம் அக்டோபர் 2021ல் மறைமாவட்ட நிலையில் அனைத்து பொதுநிலையினரும் உரையாடல்களில் பங்குகொண்டதுடன், உலகில் உள்ள அனைத்து நாடுகளின் குரல்களையும் தெளிந்து, அகில உலக நிலையில் ஒருங்கிணைப்பு, பங்கேற்பு, மறைப்பணி ஆகியவற்றை கலந்துரையாடல் செய்து, ஹூமறைபணியில் கூட்டொருங்கியத் திருஅவை' என்ற ஒருங்கிணைந்த அறிக்கையை இதன் கனியாக பெற்றோம்.

கூட்டொருங்கிய பயணத்தோடு இணைந்தும், திருத்தந்தையின் அழைப்பிற்கு இசைந்தும் இந்திய திருஅவை இன்று யூபி◌ 2025ன் தயாரிப்புகளைத் தொடங்குகிறோம்.

பொது யூபிலி கொண்டாட்டத்தின் பொன்மொழி ‘எதிர்நோக்கின் திருப்பயணிகள்’. உறுதியில்லா நிலை மற்றும் துன்பங்களை உருவாக்கிய பெருந்தொற்று மற்றும் போர்களின் மத்தியில் எதிர்நோக்கின் முக்கியத்துவத்தை நம் திருத்தந்தை பிரான்சிஸ் கோடிட்டுக் காட்டுகிறார்.

கற்றறிந்துகொள், இறைவேண்டல் செய், எழுந்து நட – இந்த சொற்களை நாம் இன்று நினைவில் கொள்வோம். இந்த தயாரிப்பு ஆண்டாகிய 2023-2024யை தொடங்கும் நாம் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளில் உள்ளடங்கிய நான்கு அமைப்பு ஆவணங்களைக் கற்றறிவோம். அத்துடன் மனிதம் முழுமைக்காகவும் திருஅவையுடன் இணைந்து இறைவேண்டல் செய்வோம். இதைத் தொடர்ந்து 2025ல் ரோமை மாநகரின் யூபிலி வாயில் வழி நடந்து நான்கு பேராலயங்களுக்கும் திருப்பயணம் மேற்கொள்வோம். நாம் இப்பொழுது வெளியிடப்போகும் யூபிலி 2025 முத்திரைச் சின்னம் – நான்கு வண்ணங்களில் நான்கு உருவங்கள் – உலகின் நான்கு எல்லைகளிலிருந்து எழுந்து வரும் மானிடம் அனைத்தையும் சித்தரிக்கின்றது. அவர்கள் ஒன்றிணைந்த சகோதரத்துவத்தில் ஒருவரை ஒருவர் தழுவுகின்றனர். முன்னே செல்லும் உருவம் எதிர்நோக்கு அளிக்கும் சிலுவையைப் பற்றிக்கொண்டுள்ளது. உருவங்களுக்கு கீழே உள்ள பெரும் அலைகள், குழப்பங்களும் துயரங்களும் மேலோங்கிய இன்றைய உலக நிலையை உருவகப்படுத்துகிறது. சிலுவையின் கீழ்ப்பகுதி நீட்டப்பட்டு ஒரு நங்கூரத்தின் வடிவம் பெற்றிருப்பது எதிர்நோக்கின் சின்னம். திருப்பயணியின் பயணம் தனிநபர் ஒருவரின் முயற்சி அல்ல மாறாக ஒன்றிணைந்த செயல் திறன் என்பதை இப்படம் வர்ணிக்கின்றது. முத்திரைச் சின்னத்தின் கீழ் யூபிலி 2025ம் ஆண்டின் பொன்மொழியாக: ‘Peregrinantes in Spem’ (‘எதிர்நோக்கின் திருப்பயணிகள்’) அமைந்திருக்கிறது.

யூபிலி 2025 கடவுளையும், திருஅவையையும், நம் ஒவ்வொருவரையும் கொண்டாடுவதற்கானது. பெரும் தொற்றுக்குப் பின் போர் தாக்கம் காணும் உலகிற்கு ‘எதிர்நோக்கு’ தேவை. எதிர்நோக்கின் திருப்பயணிகளாக நாம் நம் குடும்பங்கள்,

பணித்தளங்கள், பங்குகள், மறைமாவட்டங்கள், சமூகம் ஆகியவற்றில் எதிர்நோக்கின் ஒளியேற்றுவோம்.

கிறிஸ்து அரசர் நம்மில் எதிர்நோக்கின் கதிரை ஊன்றச் செய்து, பணிவிடையின் பாதையில் நாம் நடக்க ஊக்கமளிப்பாராக. இப்பொழுது, யூபிலி 2025ன் முத்திரைச் சின்னத்தை வெளியிடுவோம்.

மறையுரை குறிப்புக்கள்

தொடர்ந்து வரும் பகுதி யூபிலி 2025-ன் பொருள், நோக்கம், தயாரிப்பு மற்றும் இதன் கொண்டாட்டம் ஆகியவற்றை விவரிக்கின்றது. மறையுரையை தயார் செய்ய கருவியாக உதவுகிறது. நம்பிக்கையாளர் மன்றாட்டுக்களின் முடிவில் சிறுது நேர அமைதியின் போது,

குருவானவர், யூபிலி 2025ன் தயாரிப்புகள் பயனுள்ளதாக இருக்க வேண்டுமென்று மன்றாட மக்களை அழைக்கின்றார்.

1. விவிலியத்தில் யூபிலி சொற்பிறப்பியல் ரீதியாக 'யூபிலி' என்ற சொல் எபிரேய மொழியில், ஐம்பதாவது ஆண்டின் பிறப்பை அதாவது (7 முறை 7 ஆண்டுகள்) 49 ஆண்டுகளின் நிறைவை அறிவிக்க பயன்படுத்தப்படும் எக்காளத்தைக் குறிக்கும் 'யூபில்' என்ற மூலச்சொல்லிலிருந்து வருகிறது. லேவியராகமம் 25:8-13ன் படி யூபிலி விழா கொண்டாட்டம் அடிமைகள் விடுவிக்கப்படுவது, கடன்கள் மன்னிக்கப்படுவது, நிலபுலன்கள் திருப்பிக் கொடுக்கப்படுவது என்பதைப் பற்றி விவரிக்கின்றது. அதாவது நான்கு 'R': REST (நிலத்திற்கு ஓய்வு); REVIEW (மக்கள் மற்றும் கால்நடைகள் கணக்கெடுப்பு, நில அளவுகள் பரிசீலனை); RESTORE (அனைத்தையும் புதுபித்து சமூகக் கடிகாரத்தை தொடக்க நிலைக்கு நகர்த்தி); RECONCILE (கடவுளோடும், ஒருவர் மற்றவரோடும் ஒப்புரவு செய்வது) என்பதே யூபிலியின் புரிதல். இறைவாக்கினர் ஏசாயா (காண்: ஏசா 61; மற்றும் லூக் 4) கூறும் 'புனித ஆண்டு', இந்த 'யூபிலி' விழாவினையே குறிப்பிடுகிறது. இங்கு 'புனித ஆண்டு', கடவுளின் தயவையும் கருணையையும் நினைவுகூர்ந்து அறிக்கை

செய்வது என்பதாகும். விவிலிய கண்ணோட்டத்தில் யூபிலி விழா, கடந்ததை உள்வாங்கி (விடுதலையை நினைத்து), நிகழும் இத்தருணத்தை வாழ்ந்து (ஆறுதல் பெற்று), வருங்கால நோக்கத்தை (முன்னோக்கிச் செல்ல) அமைப்பது. இதுவுமின்றி யூபிலி என்பது 'காலத்தின் விழா'. காலத்தின் விழா என்ற காரணத்தால் இது கடவுளிடமிருந்து பெற்ற பரிசு. ஆகவே தான் 'எல்லா காலங்களும் யுகங்களும் உம்முடையதே' என்று பாஸ்கா திருவிழிப்பின் போது மன்றாடுகிறோம்.

1. வரலாற்றில் யூபிலிகள். முதல் முறையாக 'புனித ஆண்டு' என்ற ஜூபிலி வருடத்தை திருத்தந்தை 8ம் போனிபாஸ் 1300ம் ஆண்டில் அறிவித்தார். தொடக்கத்தில் 100 ஆண்டுகளுக்கு ஒருமுறை யூபிலி விழா கொண்டாடப்பட்டது; திருத்தந்தை 6ம் கிளெமன்ட் 1343ல் இதை 50 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடவும்; 1470ம் ஆண்டு திருத்தந்தை 2ம் பவுல் இதை 25 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடவும் ஏற்பாடுகள் செய்தனர். இத்துடன் சிறப்பான புனித ஆண்டுகளும் கொண்டாடப்பட்டன : 1933ம் ஆண்டு திருத்தந்தை 11ம் பயஸ் 1900ம் (ஆயிரத்து தொள்ளாயிரத்து) மீட்பின் ஆண்டு விழாவாகக் கொண்டாடினார். (இதனை அடிப்படையாகக் கொண்டு சில அருங்கொடை குழுக்கள் 2033ம் ஆண்டை 'பெரும் பணிக் கட்டளை'-யின் யூபிலியாக கொண்டாடுவதாக பிரச்சாரம் செய்கின்றனர். ஆனால் திருஅவை இதை அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கவில்லை); 2015ம் ஆண்டை திருத்தந்தை பிரான்சிஸ் இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டாக அறிவித்தார். 'பெரும் யூபிலி 2000, இதற்கு முன் நடந்தேறிய நடைமுறை ஜூபிலியாக இருந்ததுடன், அதற்கு மூன்று ஆண்டுகள் தயாரிப்பு செய்தோம்: 1997 (திருமகனாம் கடவுள்), 1998 (தூய ஆவியாராம் கடவுள்) மற்றும் 1999 (தந்தையாம் கடவுள்). புனித வாயில் வழியாக நுழைதல், திருப்பயணங்கள் மேற்கொள்ளுதல், பேறுபலன்கள் பெறுதல் ஆகியவை யூபிலி நிகழ்வுகளின் செயல்பாடுகளைக் கொண்டு அமைகிறது.

3. ஜூபிலியின் சிறப்பியல்புகள். யூபிலி விழா செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் நற்செய்தி அறிவிப்பு பணி மையத்தின்,

உலகளாவிய பணிசார்ந்த அடிப்படை கேள்வித் துறை யூபிலியின் ஏழு சிறப்பியல்புகளை முன்வைக்கின்றது. அவை (i) பல தளங்களைத் தாண்டி தோழர்களுடன் திருப்பயணம் செய்வது, (ii) புனித வாயில் வழியாகஇ இயேசுவே வாயில் என்ற நினைவில் நான்கு ரோமை பேரலயங்களுக்குள் நுழைவது, (iii) ஒப்புரவு (கடவுளை நம் வாழ்வில் மையப்படுத்தி சமூக நீதியை நிலைநாட்டுவது, பாவ அறிக்கை செய்வது); (iv) இறைவேண்டல் (கடவுளின் பிரசன்னத்திற்கும் அவருடைய அன்பின் சலுகைக்கும் திறந்த மனம் கொண்டிருப்பது); (v) திருவழிபாடு (திருஅவையின் பொது இறைவேண்டல், உச்சமும் ஊற்றும், வாயில் திறப்பு); (vi) நம்பிக்கை அறிக்கை (திருமுழுக்கு பெற்றவரின் அடையாளம், திருத்தூதர் நம்பிக்கை அறிக்கை, நைசீன் நம்பிக்கை அறிக்கை) மற்றும் (vii) பேறுபலன்களை நாடும் செயல்பாடுகள் (இறை இரக்கத்தை அனுபவித்தல், துன்பங்களை ஏற்றுக்கொள்ளல்).

4. ஜூபிலியின் மூன்று நோக்கங்கள். (i) இயேசுவைக் கொண்டாடுவது. யூபிலி ஆண்டில் நாம் முதன்மையாக தூய ஆவியாரின் வல்லமையால் மனு உருவான தந்தையின் மகன் இயேசுவை கொண்டாடுகிறோம் அவருடைய பிறப்பு, வாழ்வு, பணி, பாடுகள், சாவு மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை நினைவு கூறுகின்றோம். அவரை இன்னும் தெளிவாக அறியவும், இன்னும் மென்மையாய் அன்பு செய்யவும் இன்னும் நெருக்கமாய் அவரைப் பின்பற்றவும் மன உறுதியுடன் பலன் தரும் முயற்சிகளை மேற்கொள்வோம். (ii) திரு அவையை கொண்டாடுவது – இவளே நம் தாயும் ஆசிரியருமாய் இருக்கிறவர். நம் உடனிருப்பாலும் பங்களிப்பாலும் நம் புனித கத்தோலிக்க திருஅவைக்கு நம் உறுதியை புதுப்பிப்போம். மேலும் (iii) நம்மையே நாம் கொண்டாடுவது. நம்முடைய தனி வரங்களாலும் கொடைகளாலும் அழைப்புகள் மற்றும் பணிகளாலும் நம் வாழ்க்கை முறைகள் மற்றும் விழுமியங்களாலும் நாம் ஒருவரை ஒருவர் கொண்டாடுகிறோம். கடவுளை நினைவில் கொள்ளவும் அவரோடும் அவரது திருஅவையோடும் நாம் கொண்ட உறவை ஆய்வு செய்யவும் கடவுளோடும் அவர் தம் மக்களோடும் நம் உறவுகளைப் புதுப்பிக்கவும் ஜூபிலி 2025 நம்மை அழைக்கிறது. ஒன்றிணைந்து நற்செய்தி பணி செய்து பங்களித்து கூட்டொறுங்கிய பயணம் மேற்கொள்ளும்

சூழலில் நாம் இயேசுவையும் திரு அவையையும் நம்மையும் கொண்டாடுவது அமைகிறது.

5. கற்றறியவும் ஜெபம் செய்யவும் ஒரு ஆண்டு (2023-2024): கடவுளின் மக்கள் முன்செல்ல திசை மற்றும் வழிகாட்டுதல் பெறும் பொருட்டு இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் நான்கு அமைப்பு ஆவணங்களை கற்றறிய நம் திருத்தந்தை விரும்புகிறார். நான்கு அமைப்பு ஆவணங்களை (Dei Verbum, Sacrosanctum Concilium, Lumen Gentium, and Gaudium et Spes) வாசித்து, மன்றத்தின் பொது கருப்பொருள்களைப் புரிந்துகொள்ளவும், இயேசுவையும் திருஅவையையும் இன்றைய உலகில் நம் வாழ்வையும் ஆராய நாம் அழைக்கப்படுகிறோம். இரண்டாம் வத்திக்கான் சங்கம் மற்றும் நான்கு அமைப்பு ஆவணங்கள் ஆகியவற்றின் பின்புலன்களைத் தரும் வகையில், நற்செய்தி அறிவிப்பு பணி மையம் 35 சிறு புத்தகங்களை வெளியிட்டுள்ளது. இந்த இறைவேண்டல் ஆண்டில் நாம் அகில உலக திருஅவையோடு இணைந்து தல திருஅவைகளில் அனைத்து மானிடத்துக்காகவும் இறைவேண்டல் அழைக்கப்படுகிறோம். கிறிஸ்தவ வாழ்வு, அருட்சாதனங்கள் அருளடையாளங்கள், பக்தி முயற்சிகள், பொது வழிபாடுகள் ஆகியவற்றில் நாம் ஜெபத்தை பற்றிய சிந்தனைகளை மேற்கொள்ளலாம். இந்த மையம் ஜெபத்தை குறித்து 9 குறிப்பேடுகளை வெளியிட்டுள்ளது.

6. யூபிலி ஆண்டு (2025): யூபிலி ஆண்டில் நாம் நான்கு பேராலய (புனிதர்கள் பேதுரு மற்றும் பவுல் ஆலயம், புனித யோவான் லாத்தரன் ஆலயம், புனித மரியாளின் பேராலயம், நகர்ச்சுவர் வெளியே உள்ள புனித பவுல் பேராலயம்) புனித வாயில்களில் நுழைவோம். சிறைகள், முதியோர் மற்றும் ஆதரவற்றோர் இல்லங்கள், மருத்துவமனைகள், அகதிகள் முகாம்கள் எதிர்நோக்கின் சுடரை ஏற்ற, அவ்விடங்களுக்கு சென்று எதிர்நோக்கின் வாயில்களுக்குள் நுழைவோம். இந்த பொது யூபிலி 2025 நம்மை எதிர்நோக்கின் பயணிகளாக, எதிர்நோக்கை அளிப்பவர்களாக, எதிர்நோக்கை வாழ்பவர்களாக கூட்டொறுங்கிய பயணத்தின் ஓர் அங்கமாக இருக்க நம்மை அழைக்கிறது.

## PROCURATOR'S OFFICE

### MISSION SUNDAY COLLECTION - 2023

| S.No | Parish | Amount |
|---|---|---|
| 1 | A.Kattupadi | 40100 |
| 2 | Kariyandal | 21000 |
| 3 | Cathedral | 55000 |
| 4 | Gandhinagar | 75000 |
| 5 | Mosavadi | 5000 |
| 6 | Vettavalam | 107000 |
| 7 | Vandavasi | 100000 |
| 8 | Perunduraipattu | 13350 |
| 9 | Thirupattur | 10000 |
| 10 | Ambur | 6640 |
| 11 | Kodayanchi | 6250 |
| 12 | Pulivanandal | 10260 |
| 13 | Kasthambadi | 30000 |
| 14 | Christianpet | 47000 |
| 15 | Sathuvacharry | 30000 |
| 16 | Melpudupakkam | 10000 |
| 17 | Jawadhi Hills | 8700 |
| 18 | Alapakkam | 49000 |
| 19 | Randamkorattur | 7600 |
| 20 | Uriurkuppam | 10000 |
| 21 | Sipcot | 38000 |
| 22 | Gengapattu | 32390 |
| 23 | Yelagirihills | 20000 |
| 24 | Kaniyambadi | 35000 |
| 25 | Koratampet | 17830 |
| 26 | Katpadi | 25000 |
| 27 | Chetpet | 70000 |
| 28 | Thachambadi | 85060 |
| 29 | Arni | 71070 |
| | **Total** | **1036250** |

| | RELIGIOUS | |
|---|---|---|
| **S.No** | **Parish** | **Amount** |
| 1 | St.Bridgettine Convent-Sipcot | 1000 |
| 2 | St.Anne's Convent - A.Kattupadi | 3000 |
| 3 | SD Convent - Sennathur | 1000 |
| 4 | SD Convent - Perumanam | 1000 |
| 5 | Cluny Convent - Katpadi | 10000 |
| 6 | St.Thomas Hospital - Chetpet | 5000 |
| 7 | Ansaldo Convent - Chetpet | 25000 |
| | **Total** | **46000** |
| | **MANIPUR RELIFE FUND** | |
| **S.No** | **Parish** | **Amount** |
| 1 | Kariyandal | 14000 |
| | **Total** | **14000** |
| | **COMMUNIO INDIA** | |
| **S.No** | **Parish** | **Amount** |
| 1 | A.Kattupadi | 4000 |
| 2 | Sipcot | 4000 |
| 3 | Kaniyambadi | 13000 |
| | **Total** | **21000** |

Thanks for your generous contribution for Mission Sunday Collection.
Those who have not yet sent Mission Sunday Collection

Kindly send to us as early as possible.

**Very Rev. Fr. A.Kulandesu**
Procurator

**Mr. S.Justin**
Staff Accountant

**கத்தோலிக்க மேய்ப்புபணி நிலையம்**

## பங்கு மேய்ப்பு பணி பேரவை உருவாக்கம் - 2023

சிப்காட் புனித தோமையார் பங்கில் பங்குப்பேரவை உருவாக்கம் :

அக்டோபர் 8 ஆம் தேதி ஞாயிறு திருப்பலியில் அன்பிய குடும்பங்கள், பக்தசபைகள், ஒன்றுக்கூட்டப்பட்டு அன்பியத்தின் நோக்கம் செயல்பாடு என்பதைப்பற்றி வேதியர் சாமுவேல் அவர்களால் விளக்கம் கொடுக்கப்பட்டது. பின்னர் பங்குத்தந்தை தயாளராஜ் அவர்கள் அன்பிய தலைவர்களுக்கு தேர்தல் நடத்தினார். தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கு பேரவை உறுப்பினர்களுக்கு நவம்பர் மாதம் 5 ஆம் தேதி ஞாயிறு திருப்பலியில் வேலூர் மறைமாவட்ட ஒழுங்கின்படி மேய்ப்புபணி நிலைய பொறுப்பு இயக்குனர் அருட்பணி. **N.T.**இருதயராஜ் அவர்களால் பணியேற்பு அளிக்கப்பட்டது. பங்கு பேரவை உறுப்பினர்கள் பணிப் பொறுப்பிற்கான உறுதிமொழியை ஏற்றுக் கொண்டார்கள்.

பங்குப்பேரவை உருவாக்கம் அல்லியந்தல் :

புனித லூர்து அன்னை பங்கில் 29.10.23 அன்று அனைத்து அன்பிங்களை ஒன்றுக்கூட்டி பங்கு பேரவையின் செயல்பாடுகள் பற்றி வேதியர் சாமுவேல் அவர்களால் அன்பிய குழுக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர் அன்பியங்களிலிருந்து பங்கு பேரவை உறுப்பினர்கள் நியமன உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க அக்டோபர் 10 முதல் 12 ஆம் தேதி வரை தேர்தல் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கு பேரவை து.தலைவர், செயலர், துணை செயலர் மற்றும் நியமன உறுப்பினர்களுக்கு ஞாயிறு திருப்பலியில் பங்குதந்தை அருட்பணி. தேவநேசன் முன்னிலையில் வேலூர் மறைமாவட்ட ஒழுங்கின்படி மேய்ப்புபணி நிலைய பொறுப்பு இயக்குனர் **N.T.**அருட்பணி. இருதயராஜ் அவர்களால் பணியேற்பு அளிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட பங்குப் பேரவை உறுப்பினர்கள் பணிப் பொறுப்பிற்கான உறுதிமொழியை ஏற்றுக்கொண்டார்கள்.

பங்குப் பேரவை உருவாக்கம் கீழ்நாத்தூர் :

புனித அற்புத மாதா ஆலயம் பங்கில் அனைத்து அன்பிய குடும்பங்களை ஒன்றுக்கூட்டப்பட்டு அன்பியத்தின் நோக்கம் செயல்பாடு பற்றி பங்குதந்தை விப்லான் ஸ்டீபன் அவர்களால் விளக்கப்பட்டது. பின்னர் தேர்தல் நடத்தப்பட்டு பங்கு பேரவை உறுப்பினர்கள் நியமன உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நவம்பர் மாதம் 26 ஆம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கு பேரவை து.தலைவர், செயலர், துணை செயலர் மற்றும் நியமன உறுப்பினர்களுக்கு ஞாயிறு திருப்பலியில் பப்குதந்தை விபலான் ஸ்டீபன் முன்னிலையில் வேலூர் மறைமாவட்ட ஒழுங்கின்படி மேய்ப்புபணி நிலைய பொறுப்பு இயக்குனர் அருட்பணி **N.T.**இருதயராஜ் வழியாக திருவண்ணாமலை பங்குதந்தை அருட்பணி. ஞானஜோதி அவர்களால் பணியேற்பு அளிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கு பேரவை உறுப்பினர்கள் பணிப் பொறுப்பிற்கான உறுதிமொழியை ஏற்றுக் கொண்டார்கள்.

மறைக்கல்வி / நன்னெறி பாடங்கள் ஆய்வு

வேலூர், போளூர், அரக்கோணம், திருவண்ணாமலை மற்றும் வேட்டவலம் மறைவட்டத்திலுள்ள கத்தோலிக்க பள்ளிகளில் மறைக்கல்வி மற்றும் நன்னெறி பாடங்கள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அருட்பணி. **N.T.**இருதயராஜ் தலைமையிலான குழு அக்டோபர் மாதம் இரண்டாம் வாரத்திலிருந்து நவம்பர் மாதம் மூன்றாம் வாரம் வரை மறைக்கல்வி / நன்னெறி பாடங்கள் ஆய்வு செய்தார்கள். பள்ளி தாளாளர் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரிய பெருமக்கள், பிள்ளைகளை நன்கு தயாரித்து இருந்தனர். மறைக்கல்வி / நன்னெறி பாடங்கள் ஆய்வு செய்யும்போது பிள்ளைகள் ஆர்வமாக பதில் அளித்தனர். மேலும் ஆசிரியர்களின் வகுப்பு பாட குறிப்புகளும் பாட கருவிகளும் பார்வைக்கு வைத்திருந்தனர். பின்பு இயக்குனர் அவர்கள் மறைக்கல்வி / நன்னெறி ஆசிரியர்களை சந்தித்து இன்றைய கால சூழ்நிலையில் மறைக்கல்வி / நன்னெறி பாடத்தின் முக்கியத்தைப் பற்றி விளக்கம்

கொடுத்தார். மறைக்கல்வி / நன்னெறி தேர்வில் வெற்றி பெற்ற மாண மாணவியர்களுக்கு கேடயமும் சான்றிதழும் ஒவ்வொரு பள்ளிக்கும் மேய்ப்புப்பணி பொறுப்பு இயக்குனர் தந்தை **N.T.**இருதயராஜ் அவர்கள் பிள்ளைகளுக்கு கொடுத்து உற்சாகப்படுத்தினார். பள்ளி தாளாளர் / தலைமையாசிரியர்கள் ஆய்வு சிறப்பாக நடைபெற உதவி புரிந்தார்கள். வேலூர் மறைவட்டத்திலுள்ள பள்ளிகள் ஆய்வுக்காக துணைபுரிந்த அருட்பணி. சின்னசாமி, அருட்பணி தேவசகாயம், அருட்பணி. எட்வின் சவரியப்பா அருட்பணி எட்வின், அரக்கோணம் மறைவட்டத்திலுள்ள பள்ளிகளின் ஆய்வுக்கு துணைபுரிந்த அருட்பணி லியோ மரிய ஜோசப், அருட்பணி. எட்வின், அருட்பணி. தேவசகாயம், போளூர் மறைவட்டத்திற்கு துணைபுரிந்த அருட்பணி பாக்கியராஜ், அருட்பணி கிரகோரி, திருவண்ணாமலை மற்றும் வேட்டவலம் மறைவட்டத்திற்கு துணைபுரிந்த அருட்பணி டேனியல் சர்மா அருட்பணி வேளாங்கண்ணி, அருட்பணி அமுதன் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் வேதியர்கள் திருவாளர். சாமுவேல், திருவாளர். பன்னீர்செல்வம், திருவாளர். ஞானசேகர், திருவாளர். டேவிட், திருவாளர். தேவராஜ் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். மறைக்கல்வி பணிக்காக தனது பங்களிப்பு கொடுத்து உதவிய பள்ளி தாளாளர்கள், தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரிய பெருமக்களுக்கும் உளம் கனிந்த நன்றிகள்.

வேதியர்களுக்கான கிறிஸ்துப்பிறப்பு விழா கொண்டாட்டம்

டிசம்பர் மாதம் 18 ஆம் தேதி, திங்கட்கிழமை பகுதி நேர வேதியர்களுக்கும் மற்றும் முழுநேர வேதியர்களுக்கும் பேரருட்பணி ஜான் ராபர்ட் மறைமாவட்ட பரிபாலகர் தலைமையில் கிறிஸ்துப்பிறப்பு விழா கொண்டாட்டம் நடைபெறும். எனவே, இவ்விழாவிற்கு மறைமாவட்டத்தின் வழியாக ஊதியம் பெறும் பகுதி நேர வேதியர் அனைவரையும் தவறாமல் அனுப்பிவைக்குமாறு பங்கு தந்தையர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நாள் : 18.12.2023 திங்கட்கிழமை
இடம் : ஜூபிலி அரங்கம், ஆயர் இல்லம், வேலூர்
நேரம் : காலை 9.30 மணி

அன்புள்ள பங்குதந்தையர்களுக்கு,

தமிழக ஆயர்பேரவையின் அன்பியப் பணிக்குழுவால் தரப்பட்ட பங்கு அன்பியம் பற்றிய தரவுகள் பூர்த்தி செய்து தவறாமல் மறைப்பணி மையத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

டிசம்பர் மாத திருமண தயாரிப்பு வகுப்புகள்

02.12.203 - மாதத்தின் முதல் சனிக்கிழமை
இடம் - திருவண்ணாமலை உலக மாதா ஆலயம்
நேரம் - காலை 9.30 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறும்.

26.12.2023 மாதத்தின் மூன்றாம் சனிக்கிழமை
இடம் - வேலூர் ஆயர் இல்லம்
நேரம் - காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெறும்.

இறைபணியில் அன்புடன்
அருட்பணி **N.T.இருதயராஜ்**
பொறுப்பு, மேய்ப்புப்பணி நிலையம். வேலூர்

## இளைஞர் பணிக்குழு

1. மறைமாவட்ட இளைஞர் பொதுத் தேர்தல் மற்றும் மனித உரிமை நாள் (10.12.2023)

ஐநாவில் மனித உரிமை பிரகடனம் அறிவிக்கப்பட்டதின் 75-வது ஜுபிலியை முன்னிட்டு நம்முடைய மறைமாவட்ட இளைஞர்களுக்கு சிறப்பு மனித உரிமை கருத்தரங்கமும் மற்றும் மறைமாவட்ட இளைஞர் பொதுகுழு தேர்தலும் வரும் 10 தேதி, ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் 4 மணிவரை நடைபெறும். எனவே அனைத்து மறைவட்ட இளைஞர் நிர்வாக குழுவினரும் மற்றும் மறைமாவட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்குழு உறுப்பினர்களும் இந்த பொதுத் தேர்தலில் கலந்துகொள்ளும்படி அன்போடு அழைக்கிறோம். நம்முடைய மறைமாவட்டத்தில் பரிபாலகர் தந்தை பேரருட்பணி ஜான் ராபர்ட் அவர்களும், தமிழ்நாடு இளைஞர் இயக்கத்தின் இயக்குனர் அருட்தந்தை மார்ட்டின் ஜோஸ் அவர்களும் தலைமையேற்று இந்நிகழ்வில் நம் மறை மாவட்ட இளைஞர் பொறுப்பாளர்களை பாராட்ட இருக்கிறார்கள்.

2. இளைஞர் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் (27.12.2023)

நம் ஆண்டவர் இயேசுவின் பிறப்பு விழா இளைஞர் கொண்டாட்டமானது வருகின்ற 27.12.2023 புதன்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை சங்கமம் மண்டபத்தில் நம்முடைய மறைமாவட்டத்தின் இளைஞர்களுக்காக நடத்தப்படுகிறது. அன்று மறைமாவட்டத்தில் உள்ள எல்லா பங்கு இளைஞர் இயக்கங்கள் இடையே மறைமாவட்ட அளவில் பாடல் போட்டி, நடன போட்டி மற்றும் நாடக போட்டி என்று கிறிஸ்மஸ் நிகழ்வை மையப்படுத்தி நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு போட்டிகளுக்கும் மிகச்சிறந்த பரிசுகள் அளிக்கப்பட இருக்கின்றன. எனவே உங்கள்

பங்குகளில் உள்ள இளைஞர் இயக்கத்தின் அனைத்து இளைஞர்களையும் ஊக்குவித்து, அவர்களை வேலூர் ஆயர் இல்லம் அனுப்பி இந்த நாளை சிறப்பிக்கும்படியும், போட்டிகளில் கலந்துகொள்ளும்படியும் அன்போடு அழைக்கிறேன். இதற்கு உரிய படிவங்கள், இதைப் பற்றிய விவரங்கள் அனைத்தும் பங்கு இளைஞர் இயக்கத்தின் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

குறிப்புகள் :

1. எல்லா பங்கு தந்தையர்களும் கட்டாயம் பங்கில் இளைஞர் இயக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.
2. மறைவட்ட அளவிலும், மறைமாவட்ட அளவிலும் நடைபெறுகின்ற நிகழ்வுகளில் பங்கு இளைஞர்பொறுப்பாளர்களையும், உறுப்பினர்களையும் பங்கெடுக்க வைக்க வேண்டும்.
3. மறைமாவட்ட இளைஞர் பணி குழுவும் அதன் நிர்வாக மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் தங்களுடைய பங்கில் இருக்கின்ற இளைஞர் இயக்கத்தோடு இணைந்து பணி செய்ய பங்கு தந்தையர்கள் ஊக்குவிக்க வேண்டும்.
4. மாதம் ஒன்று அல்லது இரண்டு முறை இளைஞர் இயக்கங்களின் கூட்டங்கள் பங்குகளில் நடைபெறவும், ஆன்மீக, அரசியல், சமூக, கல்வி, கலை, விளையாட்டு மற்றும் சுற்றுபுற சூழலியலில் அவர்கள் ஈடுபாடும் அக்கறையும் செலுத்த ஆர்வத்தை தூண்ட வேண்டும்.
5. பங்கில் நடைபெறுகின்ற எல்லா நிகழ்வுகளிலும் இளைஞர்களுக்கான பொறுப்பையும், பங்கேற்பினையும் உறுதிபடுத்த வேண்டும்.

அருட்தந்தை **அ.ஜெயசீலன்**
இயக்குனர், இளைஞர் பணிக்குழு

**BIRTHDAY**

| | | |
|---|---|---|
| 1 | Fr. A. Anthony | 02-12-1971 |
| 2 | Fr. S. Antony Buddhan | 05-12-1949 |
| 3 | Fr. C. Matthew | 05-12-1969 |
| 4 | Fr. A.Sagaya Josephson | 05-12-1979 |
| 5 | Fr. P.Chinnappan | 07-12-1977 |
| 6 | Fr. P.John Bosco | 08-12-1952 |
| 7 | Fr. N. T.Irudayaraj | 09-12-1968 |
| 8 | Fr.A.C.Savarimuthu | 12-12-1947 |
| 9 | Fr. S.Jesu Jayabalan | 23-12-1975 |
| 10 | Fr. A.Kulandesu | 25-12-1958 |
| 11 | Fr. A.Charles Jesu Doss | 25-12-1974 |
| 12 | Fr. S.Lourduswamy | 30-12-1955 |

**ORDINATION DAY**

| | | |
|---|---|---|
| 1 | Fr. K. S.Gnana Jyothi | 01-12-1982 |
| 2 | Fr.P. Arputha Rayan | 03-12-1976 |
| 3 | Fr. K. A.Rayappa | 09-12-1982 |
| 4 | Fr. L. Susainathan | 10-12-1983 |
| 5 | Fr. S. Lourduswamy | 11-12-1981 |
| 6 | Fr. G.Mathias | 16-12-1966 |
| 7 | Fr. A. Rayappan | 19-12-1992 |
| 8 | Fr. M. Packiasamy | 21-12-1970 |
| 9 | Fr.J. Amuthan | 27-12-2021 |

## NECROLOGY

| | | |
|---|---|---|
| 1 | Rev. Fr. John Durai | 10.12.2009 |
| 2 | Rev. Fr. Stanislaus | 07.12.2011 |
| 3 | Most Rev. Eugene Mederlet SDB | 12.12.1934 |
| 4 | Rev. Fr. Capiagi SDB | 14.12.1985 |
| 5 | Rev. Fr. M. I. Jaikumar | 16.12.2006 |
| 6 | Most Rev. Antony Muthu | 19.12.1980 |
| 7 | Rev. Fr. Jaganathan Chinnappa SDB | 22.12.1994 |
| 8 | Rev. Fr. Alfred Schup SDB | 23.12.1987 |
| 9 | Rev. Fr. J. John Valarkott | 23.12.2016 |
| 10 | Rev. Fr. Gnanaprakasam | 26.12.1982 |
| 11 | Rev. Fr. Fidelis Cozzi SDB | 27.12.1963 |
| 12 | Rev. Fr. Dabove SDB | 31.12.1981 |

## HOLY FATHER'S INTENTION :

For Persons with Disabilities

We pray that people living with disabilities may be at the center of attention in society, and that institutions may offer inclusive programs which value their active participation.

## CALENDER

| | | |
|---|---|---|
| 03 | Sun | 1 st Sunday of Advent |
| 04 | Mon | St. John Damascene, Pt., Dr. |
| 06 | Wed | St. Nicholas, Bp |
| 07 | Thu | St. Ambrose, Bp., Dr., Mem |
| 08 | Fri | Immaculate Conception of B.V.M., Sol |

| | | |
|---|---|---|
| 10 | Sun | 2nd Sunday of Advent |
| 11 | Mon | St. Damasus I, Pp. |
| 12 | Tue | Our Lady of Guadalupe |
| 13 | Wed | St. Lucia, Vir, Mr., Mem |
| 14 | Thu | St. John of the Cross, Pt., Dr. Mem |
| 17 | Sun | 3rd Sunday of Advent |
| 24 | Sun | 4th Sunday of Advent |
| 25 | Mon | Christmas Day – The Nativity of Our Lord Jesus Christ |
| 26 | Tue | St. Stephen Proto – Martyr, Feast |
| 27 | Wed | St. John, AP., Ev., Feast |
| 28 | Thu | Holy Innocents., Mm., Feast |
| 31 | Sun | Holy Family of Jesus, Mary and Joseph, Feast |

**RIP**

In your Charity Kindly pray for Rev. Fr. John Rosario SDB, The Former Rector of St. Joseph Home, Katpadi and lately he was Novice Master of Saletian Brothers at Yelagiri Hill passed away on 05.11.2023. May his Soul Rest in Peace.

In your kind charity kindly pray for Mr. Agustin E. Justus the elder brother of Rev. Fr. Albin Justus, parish priest of Holy Cross Parish, Veppoor passed away on 17.11.2023. May his Soul Rest in Peace.

# யூபிலி 2025 இறைவேண்டல்

விண்ணகத் தந்தையே,

உம் திருமகனும் எம் சகோதரருமான இயேசு கிறிஸ்துவில்
நீர் எங்களுக்கு வழங்கிய நம்பிக்கையும்
தூய ஆவியார் வழியாக எங்கள் இதயங்களில்
நீர் பற்றியெரியச் செய்த பிறரன்புச் சுடரும்
உமது அரசின் வருகைக்கான எதிர்நோக்கை
எங்களில் தட்டி எழுப்புவனவாக!

நற்செய்தியின் விதைகளை நாளும் வளர்த்தெடுக்கும்
நல்லோராய் உம் அருள் எம்மை மாற்றுவதாக!
தீமையின் ஆற்றல்கள் மறைந்து
உம் மாட்சி நீடித்து ஒளிரும் பொருட்டு
மானிட உள்ளங்களும் முழு அண்டவெளியும்
புதிய விண்ணகம் புதிய மண்ணகம் நோக்கிய
காத்திருத்தலில் மாற்றம் பெறுவனவாக!

யூபிலிக் கொண்டாட்டத்தின் அருள்
விண்ணகச் செல்வங்களுக்கான ஆர்வத்தை
எதிர்நோக்கின் திருப்பயணிகளாகிய எம்மில்
தூண்டி எழுப்புவதாக!
அதே அருள் எம் மீட்பரின்
மகிழ்ச்சியையும் அமைதியையும்
அகிலமெங்கும் அளிப்பதாக!

என்றென்றும் போற்றுதற்குரிய எம் கடவுளாகிய உமக்கே
மாட்சியும் புகழும் இன்றும் என்றும் உரித்தாகுக!
ஆமென்.

திருத்தந்தை பிரான்சிஸ்